462

பிரான்மலை

## ஹஸரத் அப்துல்லா ஸாஹிப்

ஒலியுல்லா அவர்கள் மீது

# பதானந்தத் திலகக் கீர்த்தனை.



இஃது

மதுரை ஜில்லா கஸ்பா மேலூர்

## R. A. தாவூத்ஷாப் பாவலர்

அவர்களால் இயற்றப்பெற்று,

ஷை ஜில்லா ஷை தாலுகா நாவினியா நகர வாசியும்

கஸ்பா மேலூர் நாட்டாண்மையுமான

## ...மு. கா. சிக்கந்தர் ஸாஹிப்

அவர்களால்

மதுரை காஸிம் பிரஸில்

...ட்டில்பேஜ மட்டும் பதிப்பிக்கப்பெற்றது.

[...காப்பிரைட்] 1929 [இதன் விலை அணா 3

2014
784-0984
O7:417
N29
149468

இப்புத்தகம் வேண்டியவர்கள் அடியில் கண்ட விலாசதாரர்களிடம் நேரிலும் V. P. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

1. ஸ்ரீமான் ஏ. ந. வ. மூஹையதீன் அப்துல் காதிர்
புத்தக வியாபாரம்
புதுமண்டபம் மதுரை.

2. த. வ. மூ. மூஸ்தபா இராவுத்தர்
ஷாப் வியாபாரம்
சின்னக்கடை வீதி, மேலூர்.

3. மூ. மீ. மீரு அப்துல் காதிர் இராவுத்தர்
பலசரக்கு மளிகை
சொக்கலிங்கபுரம் மேலூர் போஸ்டு.

குறிப்பு:—ஒரு புஸ்தகம் வேண்டியவர்கள் மேற்கண்ட விலாசத்திற்கு $2\frac{1}{2}$ அணு ஸ்டாம்பு அனுப்பினல் புக் போஸ்டில் அனுப்பப்படும்.

# முகவுரை

இருள்சூழ்ந்த உலகத்தினிடத்து இருளை அறுத்து "புர்கான்" என்னும் ஞானசௌகரியத்தை எளிதில் யாவரு முணர்ந்து சுவர்க்க பதவியையடையச்செய்வதற்குக் கொண்டுவந்த உலகரட்சகர் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தீனிலை மார்க்கத்தை யுணர்ந்து அதன்படி நடந்து உலகத்தாருக்குப் பிரசங்கித்து அநேக தேசங்கள் தோறும் சென்று அநேகம் குபிர்க்கூட்டங்களைப்பிரகாசமான கூட்டத்திலாக்கித்தகுந்த காரணங்களைக்காட்டிக் கலியுகக் காட்சியருளுமொலியாய் பிரான்மலையிலடங்கிவாழும் "ஹஸரத் அப்துல்லா ஸாஹிபொலியுல்லா அவர்கள்மீது பதானந்தத்திலகக்கீர்த்தனை" யென்னுமிச்சிறிய நூல் மதுரை சில்லா கஸ்பா மேலூர் R. A. தாவுத்ஸாப்பாவலராலியற்றப்பட்டு எமது பார்வைக்கு வந்தது.

"கராமத்" துள்ள ஒலிமார்களின் பாதுகாப்பைத்தேடி நமது முன்னோரெல்லாம் பலவிதமாகப் போற்றியும் அதைப்பிறர்க்குச்சாற்றியும் வந்திருக்கின்றனர். அவைகளைப்பாடலாகவும் செய்திருக்கின்றனர் இசையில்லாப்பாடலினுக்கெவருமிசையார். இசையோடுங்கூடி ஒருவர் பாடும்போது பாடுவோர் மனமும் கேட்போர் மனமும் ஒருங்கே உறுகித்தத்த மிருதயம் பக்திநிலையிலீடுபடச்செய்யுமென்பதற்குச் சந்தேகமில்லை.

ஆகவே இச்சிறிய புத்தகத்திலடங்கியுள்ளபாடல்களின் விஸ்தரிப்பை எழுதவிச்சிறியவேடிடந்தாராதென வெண்ணுகிறேன். சுருங்கக்கூறுமிடத்து இதிலமைந்துள்ளபாடல்களானது யாவரும் பாடும்

வண்ணம் எளியநடையில் தற்கால நாகரீகத்திற்கேற்றவாறு இனிய வர்ணமெட்டுகளாலியற்றப்பட்டிருப்பதே இதனபூர்வ மகிமையைத் தெள்ளென விழக்கக்கூடியதாயிருக்கிறது.

இன்னுமிதைக்கண்ணுறும் நேயர்கள் இதில் இலக்கணவிதிக்குமாறுபாடுள்ள குற்றங்களேதேனுமிருப்பின் அவைகளைத்திருத்திப்பாடுவதுடன் ஷை பாவலர் இதைப்போன்ற இன்னுமநேக பெரியநூல்களை இயற்ற உற்சாகம் கொடுக்குமாறு வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாகவும்.

நேயர்கள் இவ்வலங்காரப்பத்திரசப் பதங்களை ஆவலோடு பாடும் வண்ணம் இப்புத்தகத்தை வாங்கி ஆதரிப்பீர்களென நம்புகிறோம்.

ஷை பாவலர் தன்|சிற்றறிவுக்கெட்டியவாறுதன் சிறுபிராயத்தில் இத்தகையகாரியங்களிற் சிரத்தையெடுத்துக்கொள்வதற்காக யாம் நன்றி செலுத்தக்கடப்பாடுடையேமாக

இங்ஙனம்
தமிழ்ச்சங்க வித்துவான்
தங்கப்புலவர் மகன்
**இப்ருஹீம்ஸாப் புலவர்.**

மேலூர்
10-1-29

786

பிரான்மலை ஹஜரத் அப்துல்லா ஸாஹி பொலியுல்லா

அவர்கள் மீது

# பதானந்தத்திலகக் கீர்த்தனை

---

## காப்பு.

### வெண்பா.

சதாபுகழு மப்துல்லா ஸாஹிபொலியின் மீதில்
பதானந்தக் கீர்த்தனையாற் பாரிலுள்ளோர்—சதா துதித்து
இனிமையாய்ப் பாட வியற்றமிப் பாவினுக்குத்
தனியோனே யுன்னருள் தா.

## ஆதிபெரியவன் வணக்கம்

கருவி லுருவாகி—யென்ற திருப்புகழ் வர்ணமெட்டு.

ஆதியந்தமில்லானே அம்புவியமைத்தவனே
சோதிமயமானவனே துதித்தேனே
நீதியோடிம்மை மறுமை நின்னருள்கடாட்சம்தா
ஓதினே னுன்னாமந்தன்னை உயர்ந்தோனே

குன்னென்றுரைபகர்ந்து கோறுமெண்ணம் செய்பவனே
பன்னவடங்காதபுகழ் படைத்தோனே
மன்னவனேயுந்தன்ரஹீம் மாரியையேழையென்மீதில்
என்னவிதமுமருள்வாய் இறையோனே

ஏதும்நிகரின்றியாளும் ஏகபெரியோனேயுன்னை
இந்நிலமதில் துதிக்க இருப்பேனோ

வாதுசெயுமிபுலிஸ்வைக்கும்வலையில் மாளாதாண்டிடுவாய்
வல்லவனேயுந்தன்நாமம் மறப்பேனோ
நாவிலென்னுடனமர்ந்து நவிலவே நற்றமிழைமெய்ந்த
நாளுமருளுனன்புகழை நவின்றேனே
பாவினலடியேன்தாவுத் பகருமொழிகேட்டிடுவாய்
பான்பதிசூழ்வானோர் துதி கொண்டோனே

---

பாண்டியன் என்ற வர்ணமெட்டு.

சரணமே கதி யென்னுளும் வேதா-அப்துல்லா
சாஹிபெனும் நாதா
தருணமே தாளிணை போதா-வேண்டியே
தவிக்கிறேனன் நீதா-ச

தொகையறா.

மெச்சும் நற்பிரானமலையினுச்சியிலேயமர்ந்து
மேம்பாடு பெற்று நாளும்
மெச்சிதமாயெவர்க்கும் கேட்டவரனையமலனிடம்
கேட்டே கொடுத்து வாழும்

ஷை பாட்டு

ஆதுலர்க்கானபெரும் சொத்தே-அவனியோர்க்
கருளுமறும் சித்தே
ஓதுவோர்க்கானமெய் வித்தே-உலகினில்
ஒளிதரும் முத்தே

தொகையறா.

அண்ணலேயுங்கள் தரிசனமடையவே பலர் கூடி
அகமகிழ்வாய்வரு வோர்க்கு
எண்ணில்லா நன்மைகளீந்தே சிகரத்தில்
ஏதுமிடரின்றிக் காக்கும்

ஷை பாட்டு

பூரண ஞானம் சிறந்தோரே—போற்றிடும்
புகழ் நிறந்தோரே
காரணாயமர் ந்தோரே—காட்சியைக்
காட்ட மறைந்தோரே

தொகையறு

பொய்யான உலகின்மிசை புல்லறி... யெந்தன்
புகழினைக் கேட்கொண்ணு...
மெய்யான மகிமையுற்ற மேலாம்ப... பெறவே
மேன்மையாய்க் காக்கொண்ணு...

ஷை பாட்டு

மேதினிபோற்றிடும் — திருவே—தாவுத்ஷா
மெச்சும் நற் — குருவே

---

சத்திய மகிமைதனைத்தேடு என்றவர்லைமெட்டு

சிந்தைமகிழவே சிறந் — தோங்கே—பிரான்
கிராமதனிலமர்ந் — தோமே
அந்தரமேகச் சூளா — நீயே—புகழ்
அப்துல்லாஸாஹிபொலி — யென்னீரோ—சி

தேடுதற்கரியபசும் — பொன்னே—உங்கள்
தெரிசனம் தரவென்றன் — முன்னே
பாடும்பாவினுலிங்கு — சொன்னே—னெனைப்
பாதுகாத்திடும்ஞானக் — கண்ணே—சி

பவப்பிணிதீர்க்குமுப — கார—எந்தன்
பக்திக்கிசைந்திடும்கெம் — பீரா
புவனம் போற்றுமலங் — கார—உங்கள்
பூசிதம்பெறவருள் — தார—சி

நாடினோர்க்குதவிடும்நல் — லோரே—உங்கள்
நாட்டமேலாகிவந்தேன் — நேரே
தேடித்துதித்திடும் வல் — லோரே—எந்தன்
தீவினைதீர்க்கும் வரமுள் — ளோரே—சி

பக்தியோடனுதினமே — தேடி—சிறு
பாலன் தாவுத்ஷா பதம் — பாடி
சித்தம் கலங்கிமிக — வாடி—உங்கள்
சீர்பாதம் பெறவந்தேன் — ஓடி—சி

கார்த்திகா நித்யகல்யாணு—என்ற வர்ணமெட்டு

| | |
|---|---|
| ஆதாரம் தாரும் | வேதரே |
| அப்துல்லாஸாஹிப் | நாதரே |
| பாதாரம் வந்தேன் | போதரே |
| பக்தனையாள்வீர் | நீதரே |
| சர்ச்சனர் போற்றும் | தீரரே |
| ஜகத்தினையாளும் | வீரரே |
| உச்சிதபிரான்மலை | நேரே |
| உன்னத காட்சி சிறந் | தோரே |
| வஞ்சகப்பேயை | வென்றோரே |
| வல்வினை மாற்ற | நின்றோரே |
| மிஞ்சுமகிமை கொண் | டோரே |
| மேலானதயை பூண் | டோரே |
| காருண்யம் கமழ் விஸ்தா | ரரே |
| கவலைகள் தீர்க்குமுதா | ரரே |
| கருப்பதானந்தக்கி | தரே |
| கோபிரானெனையாள் | வீரே |
| தங்காற்சிக முற் | றோரே |
| தாவு கஸ்புகழ்பெற் | றோரே |
| இங்கிதமாய் மாசற் | றோரே |
| இல்முயாவையுமகற் | றோரே |

---

வெள்ளிமலை யொத்தபலமேடை என்ற வர்ணமெட்டு

அப்துல்லா ஸாஹிபெனு மொய்யாசர்—புக
ழானபிரான்மலைக்கதி காசர்—பார்க்கும்
ஆச்சரியமான நல்ல காட்சியைக் கொடுத்திடுமு
தாசர் கெம் பீரர்

வேணவரம் தந்தருளும் வேதர்—எங்கும்
வெற்றிவேந்தரான திருப்போதர்—எந்த
வேளையிலுமவர் மலர்த்தாளையண்டினோர்க்கருளும்
நாதர் நவ நீதர்

ஆதிபெரியோன் மகிழும் நேசர்—இந்த
அவனியோர் போற்றிடு முல்லாசர்—நல்ல
ஆதாரவைத்தந்தெவர்க்குப் தீதகற்றிப்பாதுகாக்கும்
நேசர் வெகு பாசர்

தேடுவோர்க்கெதிரில் நிற்கும் சீலர்—அனு
தினமும் பணிந்திடும் பூ பாலர்—எந்தத்
தேசத்தோருமே புகழும வாசமே மிகுத்திட்ட
சீல ரனு கூலர்

நாடினோர்பவப்பிணியைத் தீர்க்கும்—எந்த
நாளுமேதாவுத்ஸா பதம் ஏர்க்கும்—எந்த
நானாவிதசாதிகளும் தீனோர் முதலான பலர்
யார்களும் கண் பார்க்கும்—அப்பா

---

காஃபி கண்காணியே என்ற வர்ணமெட்டு

பாதாரவிந்தமே பணிந்தோர்க் கவர் சொந்தமே

அனுபல்லவி

ஆதாரம் தந்தாளு மெங்களப் துல்லா ஸாஹி பொலியின்—பா

சரணங்கள்

அண்டினோ பவப்பிணியை யகற்று மெய்யாராம்
அவனிதனக்கே நன்மை யளிக்கும் கெம்பீராம்
எண்டிசையினு மகிமை யிலங்கவமைந்தோராம்
எண்ணினோர்க் கெதிரில் வந்து இன்னல்யாவும் தீர்ப்பாராம்
இப்படிக் காரணங்களைக் கண்டு—யாரும்
ஒப்பிடும் பிரான்மலைக்கே சென்று
தப்பாதவர் பாதமதில் நின்று—கேட்டால்
தந்திடுவார் வேணவரம் நன்று
தாரணியோர் போற்றும்
தருந்த புகழ் காட்டும்
கோரபிணி யோட்டும்
குவலயமே சாற்று—மொலியின்—பா

சாஹுபல தேசத்திலும் நன்மணம் நிறைந்தோராம்
நற்புகழுதனைப்பூவில் காட்டியே சிறந்தோராம்
தேனமிர்தம் தானேயெனத்தேடி டவமர்ந்தோராம்
திக்கற்றோர் யாவரும் புகழ்ந்தேற்றிட மகிழ்ந்தோராம்
சிலருடன்வர் பாதம் நின்று—சிறு
பாலன் தாவுத்ஸா பாட்டினை விண்டு
பக்தியுடனே கூடி
பாதமலரைத்தேடி
முத்திபெறவேநாடி
நத்தியே கொண்டாடி—யொலியின்—பா

---

சுயராஜ்ஜியம் என்ற வர்ணமெட்டு

புகழும் பிரான்மலையில் புகழ் சேரப்தல்லாஸாஹிப்
பொற்பாதம் கண்டு நிதம் போற்றுவோமே
அகலும் பாவப்பிணி நோய் அவர்களுதவியாலே
ஆதலாலவர் புகழ் சாற்றுவோமே

தொகையறு

இருளான உலகிற்கு ஏற்றதோ சொளியாக
எங்கணும்பரவி நாளும்
அருளாம் வரப்ரசாதமனை வோர்க்கு மீந்துமே
அல்லல் நீக்கியே வாழும்

பாட்டு

காரணம் விளங்கவே காட்டு மொலி நாதரைக்
கருத்துடனே நாளும் துதித்திடுவோம்
பூரணமனதுடன் போற்றி செய்தவர் பாதம்
புனிதம்பெறவே நெஞ்சில் பதித்திடுவோம்

தொகையறு

எத்தேசத்தோரும் வந்து இதென்னமகிமையென
எண்ணியே மனதில் நாடி
சுத்தமனதோடு வல்லதுய வொலியின் பாதம்
தோத்தரிப்பார்கள் தேடி

பாட்டு

தஞ்சம் தருவது நீர்தானென்றோர் பரிப்புடன்
தாவுத்ஸா பதம் நாளும் பாடிடுவோம்
மிஞ்சும் வானைவல்ல மேலோனிடத்தில் பெற்ற
மேன்மை யொலியின் பாதம் தேடிடுவோம்

---

பானே உன்னாலை மிச என்ற வர்ணமெட்டு

பல்லவி

நாளுமொலியின் மீதில நாட்ட மீறுதே—எந்த

அ-ப-வி

சூழும்பல தேசத்தோர் சொல்லும் பிரான்மலையில்
வாழுமப்துல்லா ஸாஹிப் நீளுமாசீரைத்தேடி—நா

சரணங்கள்

பஞ்சவர்ணக் கிளிகள் பாடும் பலபட்சிகள்
கொஞ்சிக்குலாவும் வரம் கொண்ட நாதரின் பாதம்
கோறியே மனதில் நாடுறேன்—கோமானைக்காண
மீறியேமையலால் வாடுறேன் மேதினிதனில்
மெத்த பக்தியுடனத்து மடிபேனென்
சித்தம் வாடிடாது முத்தியளித்திட—நா

ஜன்மக்களையகற்றும் காரணமானபல
தன்மைகளை யெண்ணியே நாயகரே காருமென
நாட்டம் கொண்டு தேடிவந்தேனே—பவப்பிணியை
போட்டவேண்டித் தேடி நொந்தேனே—உவந்தென்மீதில்
உல்லாசமாகவே சொல்லப்புகழுற்ற
வல்லோரே யென்தன் முன் நில்லுமென வெந்த—நா

தஞ்சமென்றோர்க்குவாய் தந்தே யுதவிடுமென்
சஞ்சலம் தீர்க்கவேண்டி சமயமதில் தேடினேனே

சந்ததம் புகழு மெய்யாரர்—தாவுத்லாவெந்தன்
சிந்தாகுலம் தீர்க்கும் தூய்பவர்—தெரிசனம்தந்தாள
தேடி யல்லுப்பக லோடியெ னுள்ளமே
வாடியே புகழைப் பாடியே வெந்த—நா

---

குமரனையே பாடி—என்ற வர்ணமெட்டு.

பல்லவி

மகிபரையே தேடி மகிழ்ந்திடு வோமே

அ-ப-வி

நிகில்பல தீவினையால் தியங்கி மயங்காவண்ண
மகிலம் துதிக்குமெங்க ளப்துல்லா ஸாஹிபெனும்—ம

தொகையரு

இன்னிலத்திலேபல மன்னர்கள் கொண்டாடி
இரவு பகலாய்த்துதிக்கும்
பொன்னிலத்தமரர்முதல் போற்றிசெய்தென்னுளும்
புனிதம்பெறவே மதிக்கும்
சிறந்தநல் மேலூர்வாசன்
செப்பும் தாவுத்லா தாசன்
உறைந்த தமிழுக்கிணை
யானவல்லவரான—மகிபரையே

---

தண்டாயுதாவுன் தஞ்சமே என்றமெட்டு.

செந்தாமறைப் பொற் பாதரே
தெரிசனம் தருவீரென் நேசே

சிந்தாகுலமிகுத்து சேவித்தேன் நாதா
சிறியேனெனைக்கரைசேர்ப்பீர் நன் னீதா
சுந்தரபிரான்மகே ஜொலித்திடும் வேதா
சுத்தமறை புகழ்ந்து சொல்லிடும் போதா—செ

காட்டு விலங்கினங்கள் களிப்புடன் சாடும்
கருணையளிக்குழுங்கள் கரபதை நாடும்
சேட்டமெகிழும் பல கீர்த்தனம் பாடும்
செம்பீரமான உங்கள் கிருபையைத் தேடும்

கூவும் குயிலினோசைக் கோஷ்டமே நாளும்
கொண்டே சுகித்திடவே குவலயமா ளும்
தாவத்ஸாபதமதால் சாற்றினேன் கேளும்
தயவுடனாசிர்வாதம் தாருமென் மேலும்—செ

---

புவனச்சந்திர பாலன்—என்ற வர்ணமெட்டு

மதிவதன சிங்காரா—மன
மகிழ்ந்திடவருள்தாரா

இந்த—மாதிரந்தனிலோ ராதரவாகவே
தீதகற்றியெனைப் பாதுகாத்திடுவீர்—ம

தொகையறு

மாக்ஷிசேர் பிரான் மலையில் மதியழகு போல்மிகுந்த
மகிமையைக் காட்டும் வேதா
காக்ஷிபெற வேயுங்கள் காதல்கொண்டு வந்தோர்க்கு
கனபரமீயும் நாதா

பாட்டு

கதியுதவிடும் தீரா—எந்தன்
கவலைதீர்க்க வென்நோய்

வந்து—கந்தப்பாதமிகத் தந்தாதரிக்கவே
சிந்தித்தே னுங்களை சிந்தை நேசத்திலும்—க

தொகையறு

அலகையின் கோஷ்டமதா லவதிப்பட்டலா தெனே
ஆதரித்தாள்சி மானே
பலவித மாய்கைப்பிர பஞ்சத்தி லாகா வண்ணம்
பாதுகாத்திடுவீர் கோனே

பாட்டு

பக்தியுடனே நாடி—யுங்கள்
பாதமலரைத் தேடி
வந்த—பாலன்தாவுத்ஸா பகரு கொழிக்கனு
கூலரே யென்னாளும் கோறும் வரம் தாரும்—பதி

---

நம்பிக்கை கொண்டெல்லோரும்—என்ற வர்ணமெட்டு

பல்லவி

பக்தியோ டனுதினமும் பாடிப் போற்றுவோம்

அனுபல்லவி

பாடிப்போற்றுவோம்—தயை
தேடிச் சாற்றுவோம்—ப

சரணம்

பாரினுக்கோரொளி போலே—யாரும்
பகரும் பிரான்மலை மேலே—பா
பதிதுதியருள் பெறுநிதியப்துல்லா வொலியைப்
பண்பாயிக காலே—நாளும்—ப

தொகையரு

மாயவுலகின்மிசை மனத்தைத் திருத்திநல்ல
மணமுற்ற நினை வாக
ஞாயமுறையோடு நட்புகொண்டவர் பாதம்
நாடுவோம் வினை போக

பாட்டு

சாடும்பலபிணி யகலும்—இது
சத்தியமே மென் மேலும்—சா
சந்ததம் தாவுத்ஸா செந்தமிழ்ப்பாவிற
லெந்த வேளே யிலும்—நாளும்—ப

---

தசரத ராஜகுமாரா—என்ற வர்ணமெட்டு

பல்லவி

பார்புகழு மப்துல்லா நாதா நவநீதா
பாதம் தாதா பஜித்தேன்போதா

அனுபல்லவி

சீர்செரும் பிரான் மலே சென்றுநீர் மேவி
சிறப்புட னமலனேச் சிந்தையில் கூவி
நேர்மையாய் வாழ்வோரே யான்நினேந்திட்டேன் தாவி
நேயகிருபையோடு வாரும் ஆசிதாரும்
கலி தீரும் கண்பாரும்

சரணங்கள்

1 சங்கை துலங்கு மலர்ச் சரணமே தேடி
சந்தித்திடவே யுங்கள் சமுகமே நாடி
சங்குல் பகலாயுள்ளம் கலங்கினேன் வாடி
காட்சி யுருமகிமை காட்டும் நன்மை யூட்டு
மெனைத் தேற்றும் துயர்மாற்றும்

2 தருணம் தமியேன்பவம் தவிர்க்கவொண் ணுதா
தத்தளித் திடுமெனைத் தாங்கவேன் வாதா
தாரணி யோர்புகழ்ந் தேற்றும் விநோதா
தஞ்சம் தருவது நீர்தானே வந்தேனே
தாவுந்நானே துதித்தேனே—பார்

---

துலங்குஞ்செம்பொன்—என்ற வர்ணமெட்டு

1 அனந்தம் பக்த ரனுதினம் துதிசெய்யும்
அலங்கார பிரான்மலை வாழும்
அப்துல்லா ஸாஹிப் நாதரே—அனைவோர்க்கும் நல்ல
ஆதாரமான போதரே

2 பூதலத்தி னிலுறு மாதுலர்க் கேதேனும்
தீதணு காமலே பாதுகாத் தாண்டிடும்
புண்யம் சிறந்த நீதரே—போற்றிடும்கா
ருண்யமிகுந்த போதரே

3 சித்தியும் பக்தியும் சிறந்திட நாளும்
அத்தனி னருள்தந் தாதரித் திடவே
அஞ்சலி செய்தேன் வாருமே—அனவரதம்
தஞ்சம்தந்தென்னைக் காருமே

4 அல்லும் பகலும் பக்கம் நில்லுமேனவே கவி
சொல்லும் தமியே னென்னைச் சோதித்திடாமல்
துய்யகிருபை செய்குவீர்—தூயவனருள்
பெய்யவநுக்ரகம் செய்குவீர்

5 பண்டு வினையகலக் கண்டு காட்சி பெறவே
தொண்டன் தாவுத்ஸா வென்க்கின்றுரை பகருவீர்
தோத்தரிக்கிறேன் கோமானே—தொல்புவிதனில்
கீர்த்தியாகவே சீமானே

---

ராஜஸிசுவாச லாலா—என்ற வர்ணமெட்டு

காரணம் விளங்கு வல்ல காருண்யரே

அநுபல்லவி

ஆரணத்திருவே அனைவர்க்கும் குருவே

தொகையரு

சீர்மிகும் பிரான்மலையிற் செப்பொண்ணு வதிசயத்தாற்
சிறப்புற்றோங்கி நாளும்
நேர்சிறந்த பாதமதில் நின்றுவரம் கேட்போர்க்கு
நேரும் வினைநீக்கி வாழும்

பாட்டு

நித்தமும் பக்தர்கள் போற்றிடும் நாதா
பக்தன் தாவுத்ஸா பஜித்திடும் போதா
பாரிலோ ராதரவைப் பகரும் வேதா—நா

---

நாகைநாதா—என்ற வர்ணமெட்டு

ஆதி பெரியோ ரைகமகிழும் ஆரணம் புகழ் வேதரே
ஜோதி யிருந்த நீதிநெறியைச் சொல்லிடும் நவநீதரே
காட்சியோ டனேக நன்மை காட்டியே பூவில் நிறந்தோரே
மாட்சிசேரும் பிரான்மலையில் மகிழ்ந்திடநாளும் சிறந்தோரே
நீழுமுலகினுசையாலே நின்று வாடிடும் பாலன் யான்
நாளுமுங்களாதரவை நாடினே னருள் செய்குவீர்
திக்கோர் புகழும் திருவே யுங்கள் தெரிசனம் பெற நாடியே
பக்கம் வரும் சிறுபாலனெனையே பண்புடனித மாள்வீரே
மெத்தபக்தியோடென்னாளும் மேவியுங்கள் பாதத்தை
நத்தும் தாவுத் ஸாவெனக்கு நற்கதியது தருவீரே

---

இப்புத்தகத்தை அச்சிலிட்டு வெளியாக்கின ஜனுப்,
ச. மு. கா. சிக்கந்தர் ஸாஹிப் அவர்கள்பேரிற்
பாடிய சிந்து

---

பூமிமெச்சிடு மண்ணுமலே—என்ற காவடிச்சிந்து வர்ணமெட்டு

1 பூவினிலே புகழ் காவினி மாககருற்றவன்
தயை பெற்றவன் மா சற்றவன்—யாரும்
பேசும் சிக்கந்தரெனும் நேசன் பலகலே
கற்றவன் அன் புற்றவன்

2 நேசமாக வித்வர் மாசகற்றுஞ்சுக நேயவான்
நற் சகாயவான் ஞான தூயவான்—துட்டர்
நெஞ்சு நய்ந் துருக விஞ்சை யூட்டுஞ்சம்பிர
தாயவான் நீதி ஞாயவான்

3 எந்தநாளும் பெரியோர்கள் சேர்க்கை யேற்கை மீறிடான்
பெய்ப்பொய் கூறிடான் இன்பம் மாறிடான்—நீதி
யேந்துஞ் சிக்கந்தர் முன் ஞலேயெமனும் வந்து
நேரிடான் எழில் பேர் கொடான்

4 சிந்தை மீதவனி னிந்துமா முகத்தைத் தேடினேன்
சிந்துபாடினேன் விந்தை சூடினேன்—யெங்குஞ்
சீர்த்திபெற்ற வெங்கள் சிக்கந்தரின் சமுகம்
தேடினேன் ஜே கொண்டாடினேன்

---

## வாழி விருத்தம்.

றக்கனின் கிருபைபாலே ஹாமிதிற சூல் வாழி
மிக்கப்புக ழொலியுல்லா மேலோனி னருளால் வாழி
பக்குவமா யிப்பதத்தைப் பாடுவோர் கேட்போர் வாழி
எக்காலு மிறைவன்பாத மிறைஞ்சுவோ ரென்றும் வாழி

பதானந்தத் திலகக் கீர்த்தனை முற்றிற்று.

## அறிவித்தல்.

அன்பர்காள்

இப்புத்தகம் இயற்றிய ஜனாப் R A தாவுத்ஸாப்பாவலர் அவர்களால் இயற்றப்பட்ட நபிநாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களின்

பக்தியானந்த பஜனாமிர்தம்

என்னும் நூதன தேசிய வர்ணமெட்டுகள்டங்ய கீர்த்தனை கூடிய சீக்கிரம் வெளிவரும் சுமார் 50 பாட்டுகள் அடங்கியுள்ளது.

அஷ்டலெக்ஷிமி விலாசம் பிரஸ், மதுரை—1929.

# மரக்கடை விளம்பரம்.

## உயர்ந்த தினுசுகள்! புதியசாமான்கள்!

ஐயன்மீர்!

மதுரை ஜில்லா மேலூர் 1-ம் நிர் ரோடு என்னும் சந்தைப் பேட்டைத் தெருவில் மு. மீ. சையது இராவுத்தர் அவர்கள் வண்டிப் பேட்டைக்குக் கிழ்புறமாயிருக்கும் எமது புதிய மரக்கடையில்

பிள்ளைமருது, மூர்மன்கைதினுசுகளும், உத்திரம், ரீப்பை, மாம்பலகைத் தினுசுகளும், பார்ச்சட்டம், போல்மரத் தினுசுகளும், வேப்பமரம் பலகை, உத்திரம் தினுசுகளும், கள்ளிக்கோட்டை ஓடு, கொல்லம் ஓடு, சதுரக்கல் தினுசுகளுப், மூங்கில்மரம், வண்டிக் கூட்டு, சாமான்களும். இரும்பு, வர்ணம், வார்னிஸ், ஷாப் சாமான்கள் முதலிய பலவகை தினுசுகள் எப்பொழுதும் ஸ்டாக்கிலிருக்கிறது.

கனவான்கள் நேரில் வந்து விலை சகாபமாக ரொக்க விலைக்கு வாங்கிக்கொள்ளலாம், இன்னும் தேவையான சாமான்கள் எம்மிடம் ஸ்டாக்கில் இல்லாதிருந்தாலும் தங்கள் தங்கள் ஆர்டர்படி தருவித்துக் கொடுக்கப்படும். ஒருமுறை நேரில்வந்து எங்களுடைய ா ான்களைப் பார்வையிட்டால் உண்மை விளங்கும்.

இங்ஙனம்,

தங்களின் ஆர்டரை எதிர்பார்க்கும்

**மு. மீ. சையது இராவுத்தர்**

மரக்கடை.

---

மேலூர்
20—1—29.